REGD. [illegible]

# திராவிடநாடு

[illegible] அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் [illegible]

மலர் 7 | 20-2-49 | [illegible]

சென்றவாரத் தொடர்ச்சி

# செக்கோஸ்லோவேகியா

## 3

[அண்ணாத்துரை]

பூந்தோட்டம் காண எண்ணம் கொண்டு, வெறும் பொட்டலில், மலர்களை நித்த நித்தம் கொண்டு வந்து கொட்டி அக் காட்சியைக் கண்டு மகிழ்வது, பயனுடைய செயலாகுமா! அது போலவே, மணம் தரும் மல்லிகைத் தோட்டத்தை உடையவன், அங்கு அல்லியும் வேண்டும் என்று எண்ணி, அல்லி பூத்திடுவதற்கு ஏற்ற முறையிலே, தோட்டத்தைத் திருத்திட முற்பட்டு, அத் திருத்தம், ஏற்கனவே உள்ள மல்லியை அழிக்கும் விதமாவது கண்டும் கவலைப்படாமல், அல்லி கிடைத்திடும்—அகமகிழ்ந்திடலாம் என்று மட்டுமே கருதினால், அவனைக் கருத்தில் தெளிவுடையோனாகக் கொள்ள முடியுமா! மொழி, மக்களின் வாழ்க்கையிலே பூத்திடுவது — வாழ்க்கை வளம் பெறவும் உதவுவது. அத்தகைய மொழி, வளமற்ற நிலையில் இருப்பின், அம்மொழியை வளமாக்க, வளம் பெற்ற வேறு மொழிகளிலிருந்து சொற்களை எடுத்துக் கொள்வதும், அதன்மூலம், தமது மொழிக்குப் புதிய பொலிவும் வலிவும் தேடுவதும் அவசியம்தான்—ஆனால் அதற்கு ஓர் அளவும் உண்டு அல்லவா? மொழி, வளமாக இருக்கும் போது, வாழ்க்கையை வளமாக்குதற்கு வேண்டிய அளவு, அம்மொழிக்கு உரமும் திறமும் இருக்கும்போது, வேறு பல மொழிகளும் உலவுகின்றன, உரசுகின்றன, உறவு கொண்டாடுகின்றன, உறுமுகின்றன, என்ற காரணத்துக்காக, அம்மொழிகளிலே உள்ள சொற்களை எடுத்து, உள்ள மொழியிலே கலந்து தமது மொழியை உருமாறச் செய்வது, கருத்தற்ற செயல் மட்டுமல்ல, கேடுதரும் செயலுமாகும். இந்தக் கேட்டினைச் செய்வதுடன் மட்டுமின்றி, இது ஏதோ ஓர் திருத்தொண்டு என்றும் பேசுவோர் உள்ளனர் நமது திருநாட்டில். பல்வேறு மொழிகளும் கலந்து விளையாடும் மேடையாக வேண்டுமாம் தமிழகம்! அதற்காகவே, வடமொழிச் சொற்களை, வரவேற்று உபசரிக்கவேண்டுமாம்! அகதிகளுக்கு ஆவடி அம்பத்தூரும், தமிழருக்குச் சிலோன் பர்மா; தேயிலைக்காடும் தந்துவரும் நீதி போலவே தான் இதுவும்!! இந்தக் கேட்டினை நாட்டுமொழிக்குச் செய்திடும் சிலர்கள், உலக வரலாற்றிலே, மொழியை இழந்ததால், இகழ்ந்ததால், அழிய விட்டதால், நாடு பல சீர்கேடு அடைந்ததைப் படித்து உணரலாம்.

ஜான்ஹஸ் காலத்துக்கு முன்பு, செக்கோ நாட்டிலே, இத்தகைய சிலர்கள் ஏராளமாக இருந்தனர். எனவே அவர்கள், தாய் மொழி, தோட்டக்காரனிடமும் வண்டியோட்டியிடமும் அடைக்கலம் புகும் அளவுக்கு, ஜெர்மன் மொழி, மாளிகைகளிலும் அலுவலகங்களிலும் கொலுவிருக்கத் தொடங்கியதைக் கண்டு [illegible]—மாறாக மகிழ்ந்தனர். தொட்டிலிலே, தாதியின் குழந்தை தூங்க, வீட்டு விளக்கு, வீதியிலே மின்னும் [illegible] எனினும், சீமான்கள் [illegible] தான் பேசினர்—மொழி பல [illegible] வது நல்லதுதானே!—என்று. முதலில் இவ்விதம், பிறகு, செக்நாட்டுச் சீமான்களின் செவிக்கு, ஜெர்மன் மொழிதான் இசைபோல் இனித்தது—தாய் மொழி, அவ்வளவு இனிப்பாக இல்லை! பிறகு ஜெர்மன் மொழி பேசத் தெரிந்தவன் என்றும் தான் பெருமை—தாய் மொழி மட்டுமே தெரியும் என்றால், இழிவு—எனும் கேடான நிலை பிறந்தது. மொழி அழிய வழி ஏற்பட்டது, பிறகு நாடு அழிந்தது—அன்னியரிடம் சிக்கிற்று. ஜெர்மானியர், வெளியார், என்றல்ல, தம்மிலும் மேம்பட்டவர்கள், தங்களுக்குப் புதிய அழகிய மொழியையும் அதன் மூலம் புதிய பண்பாட்டையும் கற்றுக்கொடுத்த கண்ணியர்கள் என்று கருதப்பட்டனர். அன்னியருக்கு இதைவிட உயர்ந்த நிலை வேறு என்ன இருக்கமுடியும்! ஆணவம் அவர்களுக்கு எப்படி ஏற்படாமலிருக்க முடியும்? ஆதிக்கம் [illegible]லிருக்குமா! வளர்ந்தது! செக்கோ நாட்டு மக்களைச் சீரழிக்கும் அளவுக்கு ஜெர்மன் ஆதிக்கம் [illegible] பிற்று. ஒரு [illegible] [illegible],

பெரியதோர் மாற்றம் — மக்களின் மனப்பான்மையில், தோற்றத்தில்! உடையில், உணவில், ஊர்ப் பெயர்களில், எல்லாவற்றிலும், மாறுதல் ஏற்பட்டுவிட்டது. செக் நாட்டு மொழி வழி அமைந்த ஊர்ப் பெயர்கள், கேவலமாகக் கருதப்பட்டன. இப்போது, தமிழகத்தில் சோற்றுக் கடை—என்று சொன்னால் அதனை பட்டிக்காட்டானின் பக்குவமற்ற பேச்சாகத்தானே கருதுகிறார்கள், ஓட்டலுக்கும்—கபேயுக்கும்—லாட்ஜுக்கும் போகிறவர்கள்! அதே போல! முதுகுன்றத்துக்குப் போக முடியாதே இப்போது—விருத்தாசலத்துக்குத்தானே போகத் தெரியும் நமது மக்களுக்கு! மறைமலை, வேதாசலம் என்று மாறினதுதானே, நமது வளர்ச்சி என்று பேசுகின்றனர், சிலர்கள்! திருமறைக்காடு, என்பது தாம் வாழும் வேதாரண்யம் என்ற சர்தார் வேதாரத்தினத்துக்கே தெரியாதே! இதேபோல, அங்கு, மொழியை இழக்கலாயினர், செக் மக்கள்.

தம்பி! என்ன புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறாய்?—என்று கேட்டால், என்ன பதில் கிடைக்கும் தமிழ்நாட்டில், இனறுகலித்தொகை என்றா? பரிபாடல் என்றா? ஐங்குறுநூறு என்றா? அகம் என்றா புறம் என்றா? அல்ல—அல்ல! அல்லி அரசாணி மாலையாக இருக்கும், பழமை விரும்பியாக இருந்தால், அல்லது அலிபாபா கதையாக இருக்கும் புதுமை விரும்பியாக இருந்தால்! செக்கோ நாட்டுக்கும் அன்று இதே நிலை ஏற்பட்டது. அந்த மக்களுக்கு, ஜெர்மன் நாட்டுச் சிறப்பு, வரலாறு, அந்நாட்டு வீரர் பெருமை, கவிதைச் சிறப்பு, தெரிந்திருந்த அளவுக்கு, தாய்நாட்டைப் பற்றித் தெரியாது. குலோத்துங்கன், கரிகாலன், வில்லவன் கோதை. இங்கு எவ்வளவு மக்களுக்குத் தெரியும்! அதுபோலத்தான்! சீரழிவு ஏற்பட்ட நிலை.

நாடு கேடுற்றதன் காரணம், மொழியை வேண்டுமென்றே கெட விட்டதுதான் என்பதை உணரச் செய்து, மீண்டும் தாய் மொழிப் பற்று வளரும் வகை கண்டார், ஜான் ஹஸ். நாட்டுக்கு உண்மையான விடுதலை கிடைக்க வேண்டுமானால், மொழிக்கு விடுதலைவேண்டும் என்ற அடிப்படை உண்மையை உணர்ந்து உரைத்தார். தாய் மொழி தனிச் சிறப்புடன் இருக்க, அதனைத் தலைமுறை தலைமுறையாக நம்மவர் போற்றி வளர்த்துப் பயன் பெற்றிருக்க, எதற்காக வெளிநாட்டவரின் மொழி இங்கு அரசாள வேண்டும்—ஏன் அந்த மொழிக்கு புலவரும் புவியாள்வோரும் அடி பணிய வேண்டும் — நமது முன்னோர்கள் முழு வாழ்வு வாழ்ந்தனரே தாய் மொழியின் துணை கொண்டு—நாம் ஏன் அதனைப் புறக்கணித்துவிட்டு, புதிய மொழியிடம் சிக்கிச் சீரழிய வேண்டும்? நமது நாட்டிலே, தாய் மொழி போற்றி வளர்க்கப்பட்ட போது, நாடு இருந்த நன்னிலையுடன், இன்றைய சீரழிவை ஒப்பிட்டுப் பாருங்கள். அன்று, என்ன செயலைச் செய்து முடிக்காமலிருந்தனர் —தாய் மொழி அவர்களை எவ்வகையிலே தவிக்கவிட்டது — இன்று, அன்னிய மொழியின் அடி வருடியதால், என்ன பயனை, பெருமையைக் கண்டுவிட்டோம்! செக் நாட்டு மக்களே! செக் மொழியில் பேசுங்கள்—எழுதுங்கள்! பாடல்கள் செக்மொழியிலே இருக்கவேண்டும்! பணி மனைகளிலே, செக்மொழியிலேயே பெயர்களைப் பொறித்திடுங்கள்! செக் மொழியிலேயே, ஊர்ப் பெயர்கள் இருக்கவேண்டும்! அவசியமற்ற அன்னிய மொழிகளை, சொற்களை, பழக்க வழக்கங்களை, பண்பாட்டை, அகற்றுங்கள்—என்ற, மொழி முனையிலேதான், உரிமைப்போரின் முதற் கட்டத்தைத் துவக்கினர். வெற்றி விரைவிலே கிடைத்தது. தமிழில் பேசு! தமிழில் எழுது! தமிழ் இசை வேண்டும்! தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள்!—என்று நாம் துவக்கியது போலவே, அங்கு! இங்கு, இன்று ஓரளவுக்கு வெற்றி கிடைத்திருக்கிறது—அங்கு அன்று, இதைவிடப் பெரிய அளவிலே, வெற்றி கிடைத்தது. இங்கு, நாராயணசாமி நெடுஞ்செழியனாகி, சீனுவாசன் செழியனாகி, சோமசுந்தரம் மதியழகனாகி, மாணிக்கவாசகம், மணிமொழியாராகி, கலியாணசுந்தரம் மணவழகனாகி, ராஜாமணி அரசியல் மணியாகி, இமயவரம்பன், எழிலரசன், இளஞ்சேரன், கூத்தரசன், நெடுமாறன், என்று தமிழ் தழைத்திடும் புதுநிலை காண்கிறோம்—களிப்புடன். இது, செக்கோ நாட்டிலே, அந்நாளில், மிக மிக அதிகமான அளவு வெற்றியுடன் நடைபெற்றது.

“அக்ராசனாதிபதி அவர்களே! மகா ஜனங்களே! இன்று அடியேன் இராமாநுஜ தாசன், உபன்யாசம் செய்ய உத்தேசித்திருக்கும் விஷயம் என்னவென்றால், ஹரிஹரப் பிரம்மாதியர்களும், அந்த நாரத மகரிஷியைச் சகல சமயங்களிலும் நாடிவந்தனரோ அப்பேர்க்கொத்த நாரதப் பிரம்மத்தின் லீலா விநோதங்களைப் பற்றியாகும்”— என்று யாராவது பேசக் கேட்டால், இப்போது தமிழகம் கைகொட்டிச் சிரிக்கும் நிலை பிறந்துவருகிறது. ஊர்ப்பெயர்கள் மட்டுமல்ல, திருத்தலங்களிலே உள்ள ‘சாமிகளின்’ பெயர்களும் கூட, தமிழ்ப் பெயர்களாக்கப் பட்டு வரும் நிலையைக் காண்கிறோம். கூட்டங்களில் தலைவர், வீற்றிருக்கிறார், அக்ராசனர்கள், மிக மிகச் சொற்பம்! சொற்பொழிவுகள் — சொற்பெருக்கு —பேருரை, இவைகள், தமிழகத்திலே, கேட்கின்றன. உபன்யாசம்— பிரசங்கம்—குறைந்துவிட்டன! விவாக சுப முகூர்த்தம் மிக மிகக் குறைந்த அளவாகி, திருமணம், வாழ்க்கைத்துணை ஒப்பந்தம், ஆகியவைகள் பரவியுள்ள நாட்களில் நாம் வாழ்கிறோம். தர்மயுத்தம் அல்ல, அறப்போர்! சேனாதிபதி கரியப்பா, அல்ல, தளபதி கரியப்பா! காந்தியார் ஜென்ம நட்சத்திரம் அல்ல, பிறந்தநாள்!—இப்படி, தமிழாக்கம் எங்கும் நடைபெறக் காண்கிறோம்— களிக்கிறோம். இடையே சில ‘ரசிகர்கள்’ இருக்கத்தான் செய்கிறார்கள், தேடித் தேடிக் கண்டுபிடித்து, அன்னிய மொழியைப் புகுத்துபவர்கள்—எனினும், நாடு நாடுவது, தாய் மொழியை என்பது நன்கு விளங்கிவிட்டது.

செக்கோ நாட்டிலேயும், இதே போலத்தான், மொழிப் பற்றினை முன்னணி கொண்டுவந்து நிறுத்திப் பணி புரிந்து வெற்றி பெற்றனர். செக் நாட்டவர், ஜெர்மன் மொழியிலே பேசிடக் கேட்டால், கேலி பேசலாயினர்! பணி மனைகளிலே, ஜெர்மன் மொழியிலே, பெயர் பொறித்திருந்தால், கேலி செய்து, தாய் மொழியில் பெயர் சூட்டுங்கள், தீட்டுங்கள், என்று கூறுவர், இந்த விழிப்பும் எழுச்சியும், செக் நாட்டிலே ஏற்பட்டு, ஜெர்மன் மொழியிடம் இருந்த மோகத்தையும் பயத்தையும் ஓட்டலாயிற்று. இங்கும் நாம், முனிசிபாலிடிகளை நகராட்சிகளாக்க வேண்டும், கமிஷனர்களை ஆணையாளர்களாக்க வேண்டும், ஆபீசுகளை அலுவலகங்களாக்க வேண்டும், அப்பீஸ் கபே, மாடர்ன் லாட்ஜ், பெரின ஓட்டல், மவுண்ட்

ரோட், மகாலட்சுமி பவன், ராயல் ரெஸ்டாரெண்டு, என்பவைகளை எல்லாம் தமிழாக்க வேண்டும். செக்கோ நாட்டவர், இந்தத் துறையிலே, வெற்றி பெற்றனர், ஜான் ஹஸ் துவக்கிய பணியின் பயனாக. வீறு கொண்டெழுந்த ஜிஸ்காவின், படையினர், இந்தத் துறையிலே, மிக அதிகமாக வெற்றி பெற்றனர். இறைவனின் வீரர்கள் என்ற பெயருடன் விளங்கிய, ஜிஸ்காவின் தோழர்கள், மிகத் தீவிரமாகப் பணி புரிந்து, செக் மொழியை வளமுள்ளதாக்கினர். புதிய புதிய கவிதைகள் இயற்றினர்! கல்லூரிகள் புதிது புதிதாக, எங்கும் செக்மொழிக்கே உயர்வு! அம்மட்டுமா! இந்த எழுச்சி, உச்சநிலை அடைந்து, 1500ம் ஆண்டு, பில்சேன் என்ற நகரில், செக்மொழி பேசாதவர்களுக்கு, ஊர்வாசி என்ற உரிமை தர முடியாது என்று தனிச் சட்டமே இயற்றினர்! இந்த எழுச்சியைக் கண்ட பிறகுதான், இனி, செக்நாட்டு மக்களை அடக்கி ஆளமுடியாது என்று ஜெர்மனியர் உணர்ந்தனர். தாய்மொழியைச் சிதைத்துவிட்டோம், எனவே தாய்நாடு என்ற எண்ணமே அழிந்துபோயிருக்கும், நமது ஆதிக்கம் இனிக் குன்றாது என்று எண்ணியிருந்தனர் எத்தர்கள். மீண்டும் தாய்மொழி தலைதூக்கவே, இனி நமது ஆதிக்கம் நிலைக்காது என்பதை அறிந்து கொண்டனர். செக்கோ நாட்டிலே எத்திக்கு நோக்கினாலும் தாய்மொழிப் பணிமிகக் கண்டனர். செக்மொழி பேசுவோரே பெரும்பான்மையினர், அவர்களிடையே உலவி ஜெர்மன் மொழிபேசும் தாங்கள் அன்னியர் என்பது விளக்கமாகி விட்டது. இரண்டறக் கலந்துவிட்டது நமது பண்பாடு, செக்கோ நாட்டின் தனிப் பண்பு இருக்குமிடம் தெரியாமல் மங்கி மடிந்துவிட்டது, என்று மனப்பால் குடித்தனர்—ஆனால் தாய்மொழிப்பற்றுத் தலைநிமிர்ந்து நின்றிடக் கண்டனர், இனி நமது ஆட்சி நிலைக்காது என்பதை அறிந்தனர்—அஞ்சலாயினர். இதே நிலையில்தான், ஜிஸ்காவின் வீரப்படையும் தாக்கலாயிற்று! விழிப்புற்ற மக்கள், வீறு கொண்ட மக்கள், நடத்திய தாக்குதல், ஜெர்மன் ஏகாதிபத்ய வெறியர்களை விரட்ட மட்டுமல்ல, ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் உள்ளவர்கள் வியந்துபோகக்கூடிய விதமாக வெற்றி தந்தது. ஜிஸ்கா, குருடன்தான்—ஆனால் அவன் பக்கம் திரண்டெழுந்த மக்கள், புத்தொளி வீசும் கண்ணினர்—தாய்மொழி காத்திடும் வீரர்கள்! எனவேதான், வெற்றிமேல் வெற்றி கிடைத்தது, அந்த வீரப்படையினருக்கு—விடுதலை கிடைத்தது தாயகத்துக்கு

(தொடரும்)

# மத ஏகாதிபத்யத்தின்மீது தாக்குதல்

## காங்கிரஸ்காரர் விடும் கணைகள்

மதத்தின் பேரால் நடைபெறும் ஊழல்களை மக்களுக்கு எடுத்துக் கூறினோம்—மதவிரோதிகள் என்று கண்டிக்கப்பட்டோம்.

கடவுள் பேரால் நடக்கும் கபட நாடகங்களை விளக்கினோம்—நாத்திகர் என்று நிந்திக்கப்பட்டோம்.

கோயில்களில் நடைபெறும் கொடுமைகளைக் கூறினோம்—வாயில் வந்தபடி எல்லாம் திட்டப்பட்டோம்.

மடாலயங்களில் மதோன்மத்த வாழ்வு நடத்தும் பண்டார சந்நிதிகளின் லீலா விநோதங்களை விளக்கினோம்—விதண்டாவாதம் செய்வதாக வீண்பழி சுமத்தப்பட்டோம்.

புரோகிதர்களின் புரட்டைப் பொதுமக்களுக்குப் புரிய வைத்தோம்—பார்ப்பன விரோதி என்று பலரும் பகைக்கக் கண்டோம்.

கோயில்களிலும் மடங்களிலும் முடங்கிக்கிடக்கும் பெருந்தொகைப் பொருளை எடுத்துக் கல்விக்குச் செலவிடச் சொன்னோம் — கயவர் என்று கண்டிக்கப்பட்டோம்.

அரைவயிறு கஞ்சிக்குக் கூட வழியற்ற நாட்டில் ஆண்டவனுக்கு ஆறுகாலப் பூஜை ஏன் என்று கேட்டோம்—அவதூறாக நிந்திக்கப்பட்டோம்.

கள்ளத் தனமாகக் கொள்ளை இலாபம் பெறுவோர் வெள்ளித் தேரும், தங்கப்பல்லக்கும் செய்து தயாபரனுக்குத் தருகிறார்களே, முறையா என்று கேட்டோம்—வீண் வம்புக்கு வருபவர்கள் என்று வெறுக்கப்பட்டோம்.

காவியும், கமண்டலமும், வெண்ணீறும், துளசியும், வேதாந்தப் பேச்சும் வெளிவேஷம் என்று விளக்கினோம்—கன்னி நடைபாடி ஏசப்பட்டோம்.

பகலிலே சாமியாகவும் இரவிலே காமியாகவும் மாறுவேடம் கொள்ளும் மடாதிபதிகளை மக்களுக்குக் காட்டினோம்—வம்பர் என்று கண்டிக்கப்பட்டோம்.

இவையும் இவைபோன்ற இன்னும் பல கொடுமைகளும் மதத்தின் பேராலும் கடவுளின் பேராலும், மக்களின் பொறுப்பணர்ச்சியைக் கொண்டே நடைபெறுகின்றன—இவற்றை எல்லாம் தடுத்து, நாட்டுக்கு நலம் பெருக, மக்களுக்கு நல்வாழ்வும் ஏற்படக்கூடிய முறையில் ஆலயங்களும் அவற்றிலுள்ள அளவு கடந்த பொருளும் பயன்பட வேண்டும் — பயன்படுத்தப்பட வேண்டும் என்று நாம் சொன்னபோதெல்லாம், பாமரர் நம்மை நாத்திகர் என்றும், நயவஞ்சகர் என்றும் நாடறியத் திட்டினார்களோ, அவர்களே—நமது அருமை நண்பர்களே—காங்கிரஸ்காரர்களே இன்று நாம் சென்றதற்கு ஒருபடி மேலேயே சென்று, நாம் கண்டித்தவைகளையும், நம்முடைய கண்டனத்துக்கு அகப்படாதவைகளையும் கண்டுபிடித்து நாட்டுக்கு அறிவிக்கிறார்கள்—மத ஏகாதிபத்யத்தின்மீது தாக்குதல் நடத்துகிறார்கள் — கண்மூடி மத அபிமானத்தைத் தகர்க்கிறார்கள்—மக்கள் நல்வாழ்வுக்கு மதம் தேவையில்லை என்று மார்தட்டிக் [illegible]

மன்றம்—சட்டமன்றம் ஏறிச் சாடுகிறார்கள்—சழக்கர்களால் கட்டிவைக்கப்பட்ட சமயக் கோட்டைகள் தவிடுபொடியாகுமளவுக்குச் சாடுகிறார்கள். 'கோயிலை இடிப்பேன்! சாமியை ஒழிப்பேன்' என்று சட்டமன்றம் ஏறிப்பேசும் அளவுக்கு, நம்முடைய முகதரிசனமே கூடாதென்று கருதியவர்களாலேயே காரணம் காட்டவும், கண்டிக்கவும் ஆன நிலை ஏற்பட்டது கண்டு களிப்படைகிறோம்.

கோயில்கள்—மடங்கள் முதலியவற்றில் குறுக்கிட்டுக் குறைகூறக் கூடாதென்றும், குறை கூறிய நம்மைக் குறைமதியினர் என்றும் கூறியவர்களே இன்று அவற்றின் மீது குற்றஞ்சாட்டி அவை திருத்தியமைக்கப்படவேண்டும் என்று கூறுகிறார்கள். அவர்களால் சாட்டப்படும் குற்றச்சாட்டுகளில் சிலவற்றை உங்கள் பார்வைக்குத் தருகிறோம், இதோ படித்துப் பாருங்கள்:-

"மத, பொருளாதார, அரசியல் நிலைகளில் எதாயினும் சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கும் பொழுதெல்லாம் 'மதத்துக்கு ஆபத்து' என்று கூச்சல் எழுப்புவது என்கிற துர்பாக்கிய நிலை இந்நாட்டில் ஏற்படுவது வழக்கமாகி விட்டது.

சாரதா சட்டம், தேவதாசி ஒழிப்பு மசோதா, ஆலய நுழைவு மசோதா ஆகியவைகள் கொணரப்பட்ட பொழுதும் மதத்தின் பெயராலேயே எதிர்ப்புக் கிளப்பப்பட்டது. இருந்தாலும் இந்தக் கூச்சல்களையெல்லாம் நாம் பொருட்படுத்தாமலே தாண்டி வந்துள்ளோம். உலகம் முன்னேறிக் கொண்டுள்ளது. அதோடு நாமும் முன்னேறவேண்டும். எனவே மதம் என்ற பெயரால் நமது முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடுபவர்கள் தங்கள் சொந்த மதத்துக்கே தீங்கு செய்கிறார்கள்.

கடவுள், மதம் என்ற பெயரால் தங்கள் வசம் ஒப்புவிக்கப்பட்ட தர்ம சொத்துக்களை அநாவசியமான முறையில் துஷ்பிரயோகம் செய்து வருபவர்களும், கொண்டுவரப்படும் இம்மசோதாவால் தங்கள் சுரண்டலுக்கு முடிவு கட்டப்பட்டு விடுமே என்று கருதுபவர்களும் ஆன சமுதாயத்திலுள்ள ஒரு பெருங்கூட்டத்தினரை இம்மசோதா பாதிக்கத்தான் செய்யும். அவர்களைப் பற்றி நமக்குக் கவலையில்லை.

சில கிஸ்திகளையோ அல்லது போர்டாருக்கு செலுத்த வேண்டிய தொகையையோ செலுத்தாதபடி பலர் இருக்கின்றனர். இதன் நோக்கம் கோயில் நிலம் ஏலத்துக்கு வந்தால் அதைத் தங்கள் வசப்படுத்திக் கொள்ளலாம் என்ற எண்ணமேயாகும்.

விசாகப்பட்டினம் முதல் திருநெல்வேலி வரை ஒரு சில நூறு ரூபாய்களிலிருந்து பல லட்சங்கள் வரை தர்ம சொத்து நிதிகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது குறித்த 65 'கேஸ்களுக்கு' மேலடங்கிய ஒரு பட்டியலே என்னிடம் இருக்கிறது. இம்மசோதாவை எதிர்ப்பவர்களை அந்தப் பட்டியலை ஒரு முறை பார்க்குமாறு நான் அழைக்கிறேன். அது உண்மையை வெட்ட வெளிச்சமாக ஆக்கும்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள வேதாரண்ய ஈஸ்வரர் கோயிலுக்கு 45 கிராமங்களில 16 000 ஏக்கர் நிலம் இருக்கிறது. அவ்வளவு இருந்தும் அதன் ஆண்டு வருமானம் ரூ 75,000 என்றே காட்டப்படுகிறது.

தென் கன்னடத்திலுள்ள ஒரு மடம் ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் 'புரோ நோட்டுகள்' மூலம் கடன் வாங்கியிருக்கிறது. இந்துமத அறநிலை போர்டார் அனுமதியில்லாமலிருந்தும் இவ்வளவு கடன் வாங்கப்பட்டுள்ளது. வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட கோயில் ஒன்றின் எல்லாத் தர்ம சொத்துக்களும் ஒரு ஜாகிர்தாருடைய எஸ்டேட்டுக்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. மேலக் கோதாவரியில் கோயில் நிலங்கள் விற்கப்பட்டிருக்கின்றன. ரூ 30,000-க்கு மேல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது.

தஞ்சையிலுள்ள ஸ்வர்க்கபுரம் மடத்தில் ரூ 15,000-க்கு மேற்பட்ட பணமும் 23 ஏகர் நிலமும் கையாளப்படும் விற்கப்பட்டும் இருக்கிறது.

திருச்செங்கோடு, வேதாரண்யம் ஆகிய இடங்களில் நகைகள் காணாமற் போனது யாவரும் அறிந்ததாகும்.

உடுப்பி பூஜா மடத்தில் அதற்குச் சொந்தமான 'நகைகள்' மடத்து ஏஜண்டுகளால் அதிகார பூர்வமின்றி அடகு வைக்கப்பட்டிருக்கின்றன.

காந்தியாரை விட இந்து மதத்தில் பற்றுள்ளவர் யார் தாம் உளர்! அவரே கூட நமது கோயில்கள் பற்றிக் கூறுகையில் கள்வர் குகைகள் என்று குறிப்பிட்டுள்ளார்.

பூஜைகளை நடத்துவதற்கான உரிமையை அறியாமை நிரம்பிய படிப்பு வாசனை யறியாத அர்ச்சகர்கள் 'பேரம்' செய்ய இனிமேல் விட முடியாது. இம்மசோதாவின் 35வது பிரிவில் இதுபற்றிக் கூறப்பட்டுள்ளது. பரம்பரையாக வேலை பார்த்து வந்த அர்ச்சகர்கள் இடம் காலியானால் அதற்குத் தகுதியுள்ள அர்ச்சகர்களை நியமனம் செய்ய இடம் உண்டு

ஏற்கெனவே அவர்கள் ஈடுபட்டுள்ள உலக (லௌகீக) விவகாரங்களிலிருந்து மடாதிபதிகளை விடுவிக்கவும் இதன் மூலம் முயற்சிக்கப்படுகிறது."

—ஓ. பி. இராமசாமி.
(முதலமைச்சர்)

"மத தர்ம ஸ்தாபனங்களின் பரிபாலனத்தில் ஊழல்கள் இருந்தால் அவைகளை அப்படியே விட்டு விடவேண்டும் என்றும் சர்க்கார் தலையிடக் கூடாது என்றும் வாதாடுகிறார்கள். ஊழல்கள் இருப்பதாகச் சர்க்காருக்கு நிச்சயமாகத் தெரிய வந்திருக்கிறது. அவைகளைச் சீர்திருத்துவது சர்க்காரின் கடமை என்று நாங்கள் சொன்னோம், எக்காரணத்தாலும் இதில் சர்க்கார் தலையிடக் கூடாது என்று நினைக்கிறவர்களை எப்படி நாங்கள் திருப்தி செய்யமுடியும்?"

—டாக்டர் இராஜன்

"சிதம்பரத்திற்குத் தெற்கிலுள்ள மடாதிபதிகளைப் பற்றி அதிகம் கூறாமலிருப்பதே நல்லது. மதத்தின் பெயரால எல்லாவித (அநியாய) செயல்களும் நடந்துவருகின்றன.

இந்த மடாதிபதிகளில் பலர் அறநிலைபச் சொத்துக்களில கள்ள மார்க்கெட் பேரம் நடத்துவதாலும், மற்றும் இவர்கள் பற்பல தவறுகள் நடத்திப் பொதுப்பணத்தை வீண் விரயம் செய்து வருவதாலும், இந்து மதத்திற்கே மானக்கேடான செயல

(9-ம் பக்கம் பார்க்க)

## காலவேகம்

12-ம் பக்கத் தொடர்ச்சி

புண்ய புருஷரும் ராஜரிஷியுமான ஜனகரின் ஆட்சியின்போது, மக்களை மடியச் செய்யும், கேடுகள் ஏற்படுவதே தவறல்லவா? கோல்கெடின் தானே குடிமக்களுக்குக் கேடுசூழும் என்று நமது புண்ய ஏடுகள் புகலுகின்றன. ஜனகரோ, ராஜரிஷி—தர்மவான்—அவர் ஆட்சியின் போது, வெள்ளத்தால் விபத்தோ, கொடுநோயால் கேடோ, தீயினால் ஆபத்தோ, பஞ்சத்தினால் பயமோ, ஏற்படக் கூடாதல்லவா? சாமான்யர்களின் ஆட்சியின்போது, அல்லது அக்ரமக்காரரின் ஆட்சியின்போது வேண்டுமானால், இத்தகைய ஆபத்துக்கள் ஏற்படக்கூடும். மிதிலையை ஆண்டுவந்தவர் ஞானி—ராஜரிஷி—சீதாதேவியாரையே திருமகளாகப்பெற்ற திவ்விய புருஷன்—அப்படிப்பட்டவரின் ஆட்சியின் போதா, நகரை நாசமாக்கும் நெருப்புப் படையெடுப்பது! முறையல்லவே! ராஜரிஷி ஆட்சியின்போதும், மக்கள் பெருவிபத்திலே சிக்கத்தான வேண்டிவந்தது, என்றால், அவர்கள், சாமான்ய மன்னனுக்கும் சற்குணவானுக்கும், என்ன வித்யாசத்தைக் காணமுடியும்! சாமான்யர்கள் அரசாண்டால் மக்களுக்கு, இயற்கையின் கோலாகலத்தால் ஏதேனும் கேடுகள் நேரிட்டால் அவைகளை நீக்கும் ஆற்றல் அவர்களுக்கு இராதாகையால், மக்கள் அவதிப்படுவர்—ஆனால் நற்குணவான்கள், நாதன் அருளைப் பெற்றவர்கள், ஞானிகள் அரசாண்டாலோ, அவ்விதமான கேடு நேரிடாது, மக்கள் மிகவும் சுகப்பட்டு வாழ்வர், அந்த நாட்டிலே, அகாலமரணமோ, தரித்திரமோ தலைகாட்டாது, என்று கூறுகிறார்கள், இதே புண்யஏடுகளைத் தீட்டுபவர். ஆனால் அவர்களே, ஜனகனைப்புகழ, மிதிலை தீப்பற்றிய சம்பவத்தை எடுத்துக்காட்டுகிறார்கள் — ஏன், புண்யபுருஷன் ஆட்சியிலே, பாபியின் ஆட்சியிலே மட்டுமே ஏற்படக்கூடிய கேடு சூழ்ந்தது, என்பது பற்றிய கவலையற்று. காரணம் என்ன இதற்கு? புண்ய ஏடுகளைத் தீட்டினவர்களிடம், ஒரு பழக்கமிருந்திருந்தது — ஏதேனும் ஒரு தத்துவத்தைப் பலப்படுத்திக்காட்ட வேண்டுமென்று அவர்கள் தீர்மானித்துவிட்டால், அந்த ஒரே நோக்கத்திலேயே ஈடுபடுவர் மும்முரமாக, அதற்காகக் கதைகள் கட்டுவர், ஆனால் அதேகதை, தாமே வலியுறுத்திவரும் வேறு தத்துவங்களைத் தகர்க்கக் கூடியதாக, கேவலப்படுத்தக்கூடியதாக அமைகிறதே என்பதுபற்றிய கவலையற்று. மான் விழிகொண்ட மங்கையின் ஓவியத்தைத் தீட்டமுனைந்தவன், நாம் இதிலே, விளக்கமாகவும் பிறர்கண்டு ஆச்சரியப்படும் விதமாகவும் தீட்டிக்காட்டவேண்டியது, கண்களைத்தானே என்று எண்ணி, ஓவியத்திலே, வாய், காது, மூக்கு, நெற்றி, ஆகிய உறுப்புகளைத் தீட்டும்போது கவலையற்று, பொருத்தமாக இருக்கிறதா என்று யோசிக்காமலேயே, ஏனோ தானோவென்று தீட்டிவிட்டு, கண்களை மட்டும், தன் கருத்தின்படியும், கலையழகு மிளிரும்படியும் தீட்டிக்காட்டினால், எப்படியிருக்கும் அந்த ஓவியம்! நமது புண்யகதைகள், இவ்விதமான ஓவியங்கள்! அவைகளைத் தீட்டினோர், கண்ணழகு கட்ட மற்ற உறுப்புக்களைக் கலைஉணர்வுமற்றுத் தீட்டிடும் ஓவியன் போன்றோர். ஆகவேதான், முரண்பாடுகள் மலிந்து காணப்படுகின்றன.

ஜனகரை, ராஜரிஷி என்று காட்டக்கருதினர் — மக்கள் பாராட்ட வேண்டும் என்பதற்காக, கருதியதும், ஒரு வேதாந்தியின் உள்ளம் எவ்விதம் இருக்கவேண்டும், என்பதுபற்றிச் சிந்தித்து, வேதாந்தி என்பவன், தனைச்சுற்றிலும் ஆபத்துச் சூழ்ந்திருப்பினும், அவதி நிறைந்திருப்பினும், கவலைகொள்ளான்—அவன் உள்ளம் சுகதுக்கம் இரண்டுக்கும் கட்டுப்படாது, என்று கண்டறிந்து, அவ்விதமான உள்ளம் ஜனகருக்கு இருந்தது என்றவிதமாகக் கதை தீட்டுவதே சரி என்று கருதினர். ஆமாம், வேதாந்தி அவர் என்பதை விளக்க இக்கதை உதவும், ஆனால் அதேபோது, ஒரு அரசனுக்கு இருக்கவேண்டுமென்று நீதி நூற்கள் குறித்திடும் குணம், உத்தம லக்ஷணமான உள்ளம், அன்புமயமாக இருக்கும், பிறர் கஷ்டம் காணச் சகியான், தொண்டு செய்வதையே கடமை என்று கொள்வான், என்று பலப்பல எடுத்துக் கட்டுகின்றனவே! ஜனகர் வேதாந்தி என்பதை விளக்குவதற்காக நாம் கூறும் சம்பவம், இந்த நீதி நூற்களின் பாடங்களை எல்லாம் பரிகசிக்கின்றனவே—அவரை வேதாந்தியாக்கிக் காட்ட வேண்டுமென்ற ஆர்வத்தால், அவரை வேந்தர் நிலையிலிருந்தும், கடமையுணர்ந்த மனிதரின் நிலையிலிருந்தே கூடக் கீழே தள்ளிவிடுகிறோமே, என்பது பற்றிக் கவலைப்படவே இல்லை. யார், இதனைக் கேட்கப் போகிறார்கள், என்ற ஒருவகை அசட்டுத் தைரியம்—அப்படி எவனாவது துணிந்துகேட்டால், அவனை முடியுமானால் சபிப்பது, இல்லையானால் வைவது, என்ற எண்ணம். மக்கள் கடைசிவரையிலே, ஏமாளிகளாகவேவா இருந்துவிடுவர்—தெளிவு பிறக்காமலா போகும்; பிறக்கும்போது, இவ்விதமான கதைகளை எடுத்து வைத்துக் கொண்டு, ஆராய்ச்சி செய்து, இப்படிக் கூறலாமா, இது பொருத்தமா, இது நீதியா, இது ஒழுங்கா, என்றெல்லாம் கேட்க ஆரம்பிக்கிறார்கள்—இப்போதுள்ள காலம் இத்தகையது. உரைகல்லாகி விட்டது உள்ளம்!!

சரித்திர பாடத்திலே, நீரோவைப் பற்றிப்படித்துவிட்டு, கொடுங்கோலன், மக்கள் மாள்வது பற்றிக் கவலையற்று இருந்த மாபிசாசின் பின்டம், இவனுக்குச் சமயம் கிடைத்தது பார்த்தாயா, வீணை வாசிக்க, என்றெல்லாம் கண்டித்துப் பேசும், மகன், இருக்கும் வீட்டிலே, தகப்பனார், மிதிலா நகரம் தீப்பிடித்துக் கொண்டபோதும், ராஜரிஷி ஜனகர், பதறாமல், குழப்பமடையாமல், வேதாந்த விசாரணையிலேயே ஈடுபட்டிருந்தார், என்று புராணம் படித்தால், சரிதம் படிக்கும் மகன், என்ன எண்ணுவான்—தகப்பனரைப் பற்றி, அவர் படிக்கும் பழைய ஏடுபற்றி, அதிலே புகழப்பட்டிருக்கும் ராஜரிஷியைப் பற்றி, மகன் மூலம் நீரோ வின் கொடுங்கோன்மையையும், கணவன் மூலம் ஜனகரின் வேதாந்த உள்ள மேன்மையையும், கேட்கும், மாதின் மனம், என்ன கதியாகும்! அத்தகைய குடும்பத்தின் நிலையில், இன்று நாடு இருக்கிறது! புராணத்தின் மூலம் மக்களுக்குப் புகுத்தப்படும் எண்ணங்கள், நீதிகள், முறைகள், திட்டங்கள், எல்லாம், புத்தறிவின் மூலம் மக்கள் பெறுவனவற்றுக்கு முற்றிலும் முரணாக அமைகின்றன—மனதிலே போராட்டம் மூண்டுவிடுகிறது. சிலரால், இந்தப் போரின் வேகத்தைத் தாங்கிக் கொள்ள முடிவதில்லை—அவர்கள் கிலி கொள்ளுகிறார்கள்,

(7-ம்பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

ஞாயிறு] 20—2—49 [காஞ்சி


## வேல் பாய்ந்த வேழம்!

❀

அவன் வீசிய வேல், பாய்ந்தது, வேழத்தின மார்பகத்தருகே! வலி! என்னும் அதற்குத்தாங்கும் சக்தியும் உண்டல்லவா? துதிக்கையால் வேலைபபற்றி இழுத்து எறிந்தது, வெளியே — இரத்தம் பீறிட்டுக் கொண்டு வந்தது — அதேபோது, ஐயோ! என்ற அலறலுடன், வேல் வீசிய வீரன் ஓடிவருகிறான், யானையிருக்கும் பக்கம்—வேங்கையொன்று அவனைத் துரத்துவதால். வேழம், துதிக்கையால் அவனைத் தூக்கித் தன் முதுகிலே வைத்துக் கொண்டு, காட்டுக்குள்ளே சென்று விட்டது—வேங்கை பின்தொடர முடியா வண்ணம்! வேழத்தின்மீது வேல் பாய்ச்சியவீரன், வேங்கையிடம் இரையாகாதபடி காப்பாற்றப் பட்டான், அவன் வீசிய வேலால் வெளிபபட்ட இரத்தக்கறைபடிந்த, யானையினாலே!

இது, எந்தக்காட்டிலே கண்ட காட்சி? என்று கேட்டுவிடாதீர்கள். நாம் கூறுவது காட்டுக்கதையல்ல, நாட்டு நிலை!!

• • •

காங்கிரஸ் சர்க்கார், எதைச் செய்ய முன்வந்தாலும், ஏதேனும் காரணம் காட்டி எதிர்க்கும், குதர்க்கவாதிகள்—காங்கிரசின்மீது தீராதபகை இவர்களுக்கு. எனவே சமயம் கிடைத்தபோதெல்லாம், விபரீதம் என்ற விஷத்தைக்கக்குகிறார்கள—காங்கிரசுக்குத் தொல்லை தருவதே இவர்கள்வேலை — அதே வேலையாகத் திரிகிறார்கள் எவ்வளவ நல்ல காரியம் செய்ய முனைந்தாலும் குறுக்கிட்டுத் தடைசெய்வதே இவர்களின் சுபாவம்.

*நம்மைப்பற்றிக் காங்கிரஸ் தலைவர்கள், பேசுவது, இவ்விதம்—ஏசுவது, மேடைகளிலே, இதுபோல.*

*காங்கிரஸ் சர்க்கார், மதுவிலக்குச்சட்டம் நிறைவேற்றினர், நாம் ஆதரித்தோம்.*

*காங்கிரஸ் சர்க்கார், ஜெமீன் ஒழிப்புச்சட்டம் கொண்டு வந்தனர், நாம் ஆதரித்தோம்.*

*காங்கிரஸ் சர்க்காரின் தலைமைப் பீடத்தினர், ஹைதராபாத்தை அடக்கப் படையை அனுப்பினர்—நாம் ஆதரித்தோம்.*

*நாட்டுக்கு நன்மைபயக்கக்கூடிய, எந்தக் காரியத்தைக் காங்கிரஸ் சர்க்கார் செய்ய முன்வந்தபோதும், நாம் ஆதரித்தே வந்திருக்கிறோம்.*

*எனினும், காங்கிரசிலே உள்ள சில கனவான்கள், நாம் அவர்கள் செய்யும் எந்தக்காரியத்தையும், எதிர்க்கிறவர்கள், கண்டிக்கிறவர்கள், என்றே பேசுகின்றனர்.*

*காங்கிரஸ் சர்க்கார், தொழிலாளர் பிரச்னையிலே, காட்டும் மூடுக்கையும், கொள்ளும் போக்கையும், வீசும் அடக்குமுறையையும் நாம் கண்டிக்கிறோம் — எதிர்க்கிறோம்—நீதியிலும் நேர்மையிலும், மக்களின் நல்வாழ்விலும் நமக்குக் கவலை இருக்கிற காரணத்தால்.*

*காங்கிரஸ் சர்க்கார், உணவு, உடைப்பிரச்னைகளைக் கவனிக்கும் முறையையும், அதனால் ஏற்படும் சிக்கல்களையும் சிரமத்தையும், கண்டிக்கிறோம், மக்களின் அன்றாட வாழ்வு, அரைவயிற்றுக் கஞ்சிக்கே ஆலாய்ப்பறக்கும் விதமாகிறதே என்ற கவலையால்.*

*யாரையும், எப்போது வேண்டுமானாலும், காரணம் ஏதும் காட்டாமலேயே, வழக்கு மன்றத்துக்குக் கொண்டுவராமலேயே, சிறையிலே தள்ளக்கூடிய விதமாக அமைக்கப் பட்டிருக்கும், பொதுஜன பாதுகாப்புச் சட்டத்தை நிச்சயமாகக் கண்டிக்கிறோம், மக்களாட்சியின் மாண்பை மாய்க்கிறது அந்தச் சட்டம் என்ற காரணத்தால்.*

*எதிர்க்கட்சி எதுவுமே தலைதூக்க முடியாதபடி, அடக்குமுறையும் தடை உத்தரவும் போடுவதைப் பலமாகக் கண்டிக்கிறோம், உரிமை பறிக்கப்பட்டு, மக்கள் ஊமைகளாக்கப் படுகிறார்கள், இது ஜனநாயக முறையல்ல, உருமிக்கட்டிய ஹிட்லர், முசோலினி போன்றாரின் முறை, என்ற காரணத்தால்.*

*எதற்கு எடுத்தாலும் டில்லிக்குக் காவடி தூக்கும் போக்கைக் கண்டிக்கிறோம், மாகாண சுயாட்சி கேலிக் கூத்தாக்கப்படுகிறதே என்ற காரணத்தால்.*

*இந்தியைத் திணிப்பதைக் கண்டிக்கிறோம், இனியதமிழ் கெடும், தமிழர் வாழ்விலே ஆரியநஞ்சு கலக்கப் படும், என்ற காரணத்தால்.*

*மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையான, மதுவிலக்கு, ஜெமீன்ஒழிப்பு, உள்நாட்டுப் பாதுகாப்புப் போன்ற பிரச்னைகளிலே, நாம், காங்கிரஸ் சர்க்காரின் திட்டத்தையும் முறையையும் ஆதரித்து வந்திருக்கிறோம்—அதே, மக்களின் நல்வாழ்வுக்குக் கேடு செய்யக்கூடிய காரியங்களைக் காங்கிரஸ் சர்க்கார், எக்காரணம் கூறியோ, செய்ய முனையும்போது, எதிர்த்து வந்திருக்கிறோம்.*

*நல்லறிவும், நாட்டுமக்களிடம் அக்கரையும் கொண்ட எந்தக் கட்சி செய்யாது, இதுபோல! இதைவிடக் கண்ணியமான முறையிலும் கருத்துத் தெளிவுள்ள விதத்திலும், எந்தக் கட்சியாவது, நடந்து கொள்ள முடியுமா என்று கேட்கிறோம்.*

*இந்தக்கண்ணியத்துக்கு நமக்குக் கிடைத்த பரிசு என்ன? நூற்றுக் கணக்கானவர்களுக்குச்சிறைவாசம்! பலருக்குத் தடியடி!! பத்திரிகைகளுக்கு ஜாமீன்! புத்தகங்களுக்குத் தடை! நாடகங்களுக்குத் தடை! பொதுக் கூட்டங்களுக்குத் தடை! கட்சித் தோழர்கள்மீது வழக்கு! கட்சிப் பற்றுகொண்ட மாணவர்களுக்குத் தண்டனை!! இவ்வளவும், நமக்கு!! இஃதன்றி, ஏசல்பாணம்ஏராளமாக! தூற்றல் பிரசாரம், தொடர்ந்து!*

*காங்கிரஸ் சர்க்கார் அமைக்கப் பட்டதிலிருந்து இதுவரையில்நாட்டு மக்களின் நன்மைக்கு உகந்த, எந்தக் காரியத்தைச் செய்யும்போது, நாம் எதிர்த்தோம் என்று கூறட்டுமே, தூற்றும் நண்பர்கள்.*

*நாட்கள்பலவாகிவிடவில்லை, நமது தோழர்களுக்கு, அடிவிழுந்து, குடந்தையில்—அன்பின் உருவம், அஹிம்சைப்பாதகர், காந்தியாரின் பெயர் கூறி, ஆளவந்தாளானவர்கள் தந்த தடியடி! அந்த இரத்தக்கறைகூட இன்னும் போகவில்லை — தழும்பு மாறவில்லை—எனினும் — அதே நிலையிலேயுங்கூட, நாம், அற்பலைப்பாதுகாப்பு விஷயமாகக் காங்கிரஸ்சர்க்கார் ஒரு சட்டம் தீட்ட முன்வந்து, முப்புரி*

யின் மனமையினால் எப்புரியினும் ஆதிக்கம் செலுத்தமுடியும் என்று எண்ணும் சத்தர் சிலர், இதன் பொருட்டுக் காங்கிரஸ் சர்க்காரைக் கண்டிக்கவும், எதிர்க்கவும் துணிந்த போது, இரத்தக்கறையைக் கூடப் பிறகு கழுவிக் கொள்ளலாம், இப்போது நாம் முதலில் செய்யவேண்டியது, காங்கிரஸ் சர்க்காரை ஆதரிப்பதுதான், என்று பெருங்குணம் கொண்டு, ஓமந்தூராரின் பக்கம் திரண்டு நின்றோம்!

கண்ணியத்துக்கும், கொள்கைப் பற்றுக்கும், இதைவிடச் சிறந்தஎடுத்துக்காட்டு ஏதேனும் உண்டா, என்று கேட்கிறோம்.

பண்புடையோரின் செயல் எங்ஙனம் இருக்கும் என்பதை, இதிலிருந்தேனும், காமராஜர்கள் தெரிந்து கொள்ள வேண்டுகிறோம்.

காங்கிரஸ் சர்க்காரின் திட்டம், நமது கட்சியைக் கருவறுக்கும் அளவுக்கு அடக்குமுறை வீசும் கட்சியின் திட்டம் என்ற காரணத்துக்காக, அந்தக் கட்சி கொண்டுவரும் மடாலய சம்பந்தமான மசோதாவை நாம் ஆதரிக்காமலோ, அக்கறை செலுத்தாமலோ, இருந்துவிடவில்லை கட்சிமாச்சரியங்களைவிட, கொள்கைமேலானது, என்றஉள்ளத்தினராகையால், நாம், இச்சமயத்தில், காங்கிரஸ் சர்க்காரின் போக்கை ஆதரிப்பதே முறைஎன்று தீர்மானித்தோம்.

இதேபோது, சொந்தக் கட்சியினர், கூடிக்குலவுபவர், கொடிகட்டி வாழ்பவர்கள், எவ்வளவு கோணற் சேட்டைகளைச் செய்து வருகிறனர், என்பதைக் கவனித்துப்பார்க்க வேண்டுகிறோம்.

கட்சிமாச்சரியம், அடக்குமுறையினால் தாக்கப்படுவதால் ஏற்பட்டுள்ள கோபம், இவைகளை எல்லாம் மறந்து, மடாலயங்களின்போக்கைக் கட்டுப்படுத்தும் துவக்கமாக உள்ள மசோதா மக்களின் நன்மைக்கு ஏற்றது, எனவே அதனை ஆதரித்தாக வேண்டும், என்று நாம் துடித்தெழ, அதே சமயம், வைத்தியநாத ஐயர்கள், கட்சிப் பற்று, கட்சிக் கட்டுப்பாடு, முதலியவற்றைத் துச்சமென்று தூக்கி எறிந்துவிட்டு, மத விஷயத்திலே தலையிட அனுமதித்துவிட்டால், பிறகு, நம்மவரின் ஆதிக்கமே அஸ்தமித்துவிடுமே என்று அஞ்சி, காங்கிரஸைவிட, இனப்பாதுகாப்பே முக்கியம் என்று எண்ணி, ஓமந்தூராரின் திட்டத்தை முறியடிக்கக் கிளம்பியுள்ளதையும் — இந்த இரு காட்சிகளையும், ஒப்பிட்டுப் பார்த்து, பாடம் பெற வேண்டுகிறோம், நம்மைப் பகைத்துக்கொள்வதே, பாரத மாதாவுக்குப் பிரியமான சேவை என்று எண்ணும் நண்பர்கள்! நமது கழகம், வேல் பாய்ந்த வேழம் போலிருக்கிறது; ஓமந்தூரார், வேல் வீசிய வீரர் — வேங்கை துரத்துகிறது அவரை, வஞ்சகம், சனாதனம், வர்ணாஸ்ரமம், அவரைத் தாக்குகிறது; வேழம் அவருக்குத் துணை நிற்கிறது!

5-ம் பக்கத் தொடர்ச்சி

இந்த மனப் போராட்டம், என்ன கேடுகளைச் செய்துவிடுமோ, என்று சிலர், தன்னலக்காரர்கள்-பழமை நீடித்து இருந்தால் தான் தங்களுக்குப் பெருமை, பிழைப்பு, என்று எண்ணிக்கொண்டுள்ள ஏமாளிகள், அவர்கள், புத்தறிவு புகாதபடி மக்களைப் பழமையிலேயே ஆழ்த்தி வைக்கப் பல வழிகளாலும் முனைபவர். புத்தறிவு பரப்புபவரை, தாறுமாறாக ஏசுவதன் மூலம், தங்கள் தோல்வியையும் அபாத்தையும் காட்டிக் கொள்பவர்கள். ஆனால் சமுதாயத்திலே உள்ள பெரும்பாலான மக்களின் உள்ளத்திலே, இந்தப் போர், நடந்தவண்ணம் இருக்கிறது — போரும் கடுமையானதாகவே இருக்கிறது—வெற்றியோ, ஒவ்வோர் கட்டத்தின் போதும், புத்தறிவுக்குத்தான் கிடைத்து வருகிறது— பழமை மடிகிறது-அதன் பக்கம் இருந்துகொண்டு சில பிணந்தூக்கிகள் பெருங்குரல் கொண்டு கூவினாலும், பிணம் பிணம்தான் — உயிர் பெறாது!! புராண மூலம், மக்கள் இனி, தமது வாழ்க்கைக்கு, முறைகளை, நீதிகளைத் தேடமாட்டார்கள்— முடியாது—கவர்னர் ஜெனரல் ராஜகோபாலாச்சாரியார், புராணம் படித்தவர்—சில மடிசஞ்சிகளுக்குத் தெரிந்திருக்கும் வேத உண்மைகளைவிடச் சற்று அதிகமாகவே அறிந்தவர்— அவருக்கும், ராஜரிஷியின கதை தெரியும்— தெரிந்தகாரணத்தால்; அவர் டில்லிப் பட்டணம் எக்காரணம் பற்றியோ தீப்பிடித்துக் கொண்டால், தான் ஒரு தலை சிறந்த வேதாந்தி என்பதைக் காட்டிக்கொள்வதற்காக, மாளிகையிலே கவலைப்படாமலிருந்துகொண்டு, சாந்தி பர்வம் படித்துக்கொண்டு இருப்பாரா? இருந்தால், அவரை மனிதர் போற்றுமா? ஆட்சிப் பொறுப்பை மறந்தவர் என்றல்லவா தூற்றும்! ஆயிரம் மடிசஞ்சிகள் கூடிக்கொண்டு "ஆச்சார்ய ஸ்வாமிகளின் போக்கைக் கண்டு தவறுகள் என்னுகிறீர்கள். அவர் கலியுக ஜனகர்—ராஜரிஷி—ஆதிநாட்களில் மிதிலை தீப்பிடித்துக் கொண்ட போது ஜனக மகாராஜா எப்படி, எல்லாம் அவன் செயல் என்றெண்ணி இருந்துவிட்டாரோ, அதுபோல இருக்கிறார்—இது அவருடைய உத்தம குணத்துக்கு ஓர் உன்னதமான சான்று-அவருடைய வேதாந்த மனப்பான்மையை விளக்கும் சம்பவம்—என்று கூவினாலும், யாராவது, அந்தக் கூச்சலைப் பொருட்படுத்துவார்களா! என்ன ஆணவமய்யா இதுகளுக்கு! ஊர் நெருப்புப் பிடித்துக்கொண்டது, ஊராளும் உயர்ந்த பொறுப்பில் உள்ளவர், மாளிகையில் இருந்துவிட்டார், மக்கள் துயர் தீர்க்க முன்வராமல், இதற்கு ஒரு காரணம் கூறுகிறார்கள், நம்மை ஏமாளிகள் என்று எண்ணிக்கொண்டு" என்று மக்கள் கொதிப்புடன் கூறுவர். சந்தேகம் கொள்வோர், செய்து பார்க்கட்டும், பழைய ஏடுகளிலே கூறப்பட்ட முறைப்படியான நீதி வெற்றியை நிலைநாட்டும் காரியத்தை!! சட்டம் குறுக்கிடும், பலவற்றிலே, மற்றவற்றிலே, மக்களின் கோபம் குறுக்கிடும். எனவேதான், காலத்திற்கு ஒவ்வாததும், கலைக்கு உதவாததும், கருத்துக் குழப்பத்தை மூட்டக்கூடியதுமான, புராணக்கதைகளை, புனைகதைகள் என்று கூறி, இனியும் மக்களிடையே அவைகளுக்குச்செல்வாக்குத் தேடப் பார்க்கும் சிறுமதியை விட்டொழியுங்கள் என்று கூறுகிறோம். சீறிப்பயன் இல்லை—சிறுமதிகொண்டு பேசிப் பயன் இல்லை — பழமை மடியத்தான் செய்யும்.

வேதாந்தியின் உள்ளம் இவ்விதம் இருக்கவேண்டும் என்பதை விளக்க, பெரு விபத்து நேரிட்ட போதும், அரசன், தன் மக்களின் துயர் தீர்க்கும் பணியைச் செய்யாது, ஞான மார்க்கத்தில் ஈடுபட்டிருந்தான், என்று கூறும், புண்ய ஏடுகளை, அன்பு, இரக்கம், எனும் பண்புகளின் பெருமையினை விளக்க, வேறு பல கூறி உள்ளன. இராவணனை,

இந்த இரக்கம் எனும் பண்பு இல்லாததாலேயே அழிக்கவேண்டி நேரிட்டது என்று கம்பர் கூறுகிறார். இரக்கம் எனும் ஒரு பொருளிலா அரக்கன் என்று குற்றம் சாட்டுகிறார். இதனைக் கருத்துடன் படித்துணருபவர்கள், இரக்கத்தின் அவசியத்தையும், அந்தப் பண்பு இல்லாதவன் அரக்கனாகிறான், என்பதையும் அறிந்துகொள்கிறார்கள், என்று வைத்துக்கொள்வோம். அவர்கள் பிறகு ஓர்சமயம், ஜனகரின் கதையை, மிதிலை தீப்பிடித்து எரிந்தபோதும், அவர் வேதாந்தம் படித்த சம்பவத்தைப் படிக்க நேரிட்டால், என்ன எண்ணுவர்! அவர்கள் மனதிலே, கம்பர், பதியவைக்கிறார், பாடல் மூலம், இரக்கம் எனும் ஒரு பொருளிலாதார் அரக்கர் என்று—அவர்களிடம் ஜனகரின் கதையும் கூறப்படுகிறது—இரண்டு தகவல்களையும் பெற்றால், இரக்கம் இந்த ஜனகருக்குத் துளியும் இருந்ததாகத் தெரியவில்லையே—இரக்கத்தை மறந்தோர் அரக்கர் என்று கம்பர் கூறுகிறாரே, அவ்விதம் பார்க்கும்போது, ஜனகரும் அரக்கர்தானே—ஏன் அவரை, ராஜரிஷி என்று புகழ்கிறார்கள், என்று, கேட்பார்களா, மாட்டார்களா? கேட்கும்போது கோபம்வரத்தான்செய்யும், பழமை விரும்பிகளுக்கு! வீட்டுக்குடையோன் விழித்துக் கொள்வது கண்டு, கள்ளன் கூடத் தான் கோபிக்கிறான்—சமயம் கிடைத்தால் கல்லைத் தூக்கிக்கூடப் போடுகிறான் வீட்டுக்குடையவன் தலைமீது! அதனாலே, அவனுடைய கோபத்தைக் கிளறக்கூடாதென்று, சட்டம் சும்மா இருந்துவிடுமா! அதுபோல, புத்தறிவும், இந்தப் பழமை விரும்பிகள் பதறுகிறார்கள், பகைக்கிறார்கள், பழி பல கூறுகிறார்கள், என்பதற்கஞ்சி, தன் பணியினைச் செய்யாமலிருக்குமா! இரக்கம், சிறந்த பண்பு—அதனைக் கொள்ளாதவர் அரக்கர்! இராவணனிடம் இரக்கம் இல்லை—ஏதோ ஒரு காரணத்தால்! ஜனகரிடமும் இரக்கம் இல்லை—இன்னோர் காரணத்தால்—இரக்கமற்ற இராவணன் அரக்கன் என்று கண்டிக்கப்படுகிறான்—இரக்கத்தைப் பற்றிக் கவலை கொள்ளாதிருந்த ஜனகன் ராஜரிஷி என்று போற்றப்படுகிறான்—இது எந்த வகையான நியாயம், என்று, கேட்காமலிருப்பார்களோ? மகாபாபி ஜனக மகரிஷியைக் கூடக் கேவலமாகப் பேசுகிறானே—இவன் நாக்கு அழுகாதோ, என்று அழுதால் கிளம்பி என்ன பயன்? விளக்கம் கேட்கும் காலம் இது—பொருத்தமற்றவைகளை நீக்கும் காலம்—பழைய கதைகளை நம்பி வாழ்க்கையை நடத்த முடியாத காலம்—இந்தக் காலத்திலே கபடரோ கயவரோ, கருத்துத் தெளிவற்றவரோ, ஏதேனும் ஒருவிஷயத்திலே கருத்தைச் செலுத்தி மற்றதை மறந்தவரோ, யாராக இருப்பினும், அவர்கள் அன்று தீட்டிய கதைகளைச் சுமந்துகொண்டு, காலவீரனுடன் போரிடக் கிளம்புவது, பயனற்ற காரியம். கால் வீக்கம் கொண்டவன் தனக்கு யானைப் பலம் இருக்கும் என்று நம்பினால், சரியாகுமா! நான் புராணம் படித்தவன், சாஸ்திரம் அறிந்தவன், சாமம் தெரியும் யஜுர் தெரியும், சாணக்கிய ப்ரம்பரை, என்று இவைபோன்ற பெருமைகளைக் கூறிக்கொண்டு, போரிட முன்வருபவர், யானைக்கால் வியாதி கொண்டவன், தனக்கு யானையின் பலம் உண்டு என்று எண்ணும் ஏமாளிக்குச் சமமாவான். காலமறிந்து, நிலையறிந்து நடந்து கொள்ளத் தெரியாத சுபந்தங்களைப் பற்றிக் கவலைப்படத்தேவையில்லை. புத்தறிவு வெல்கிறது — பழமை மடிகிறது.

# அண்ணாமலை நகர் மாணவர் வழக்கு

## பெரியார் வேண்டுகோள்

—*—

1947—ம் ஆண்டு அக்டோபர் 6-ந் தேதியில் சிதம்பரம் அண்ணாமலை நகர் கல்லூரி மாணவர்கள் ஒரு விழா கொண்டாடிய சமயத்தில் அக் கல்லூரியில் உள்ள காங்கிரஸ் உணர்ச்சி உள்ள மாணவர்கள் சிலர் திராவிடர் கழகக் கொடியைப் பலவந்தமாக இறக்க முயற்சித்ததன் பொருட்டு ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக போலீசார் இருதரப்பு மாணவர்கள் மீதும் அதாவது கழக உணர்ச்சி மாணவர்கள் 5-பேர்கள் மீதும், காங்கிரஸ் உணர்ச்சி மாணவர்கள் 12 பேர் மீதும் வழக்குத் தொடுத்தார்கள்.

இவ்வழக்கு சுமார் 2, 3 மாதகாலம் நடந்து சில சாட்சிகள் விசாரிக்கப்பட்டபின் காங்கிரஸ் உணர்ச்சி மாணவர்கள்மீது குற்றம் ஏற்படுவதைக் கண்ட சிதம்பரம் காங்கிரஸ் தோழர்கள் மந்திரியிடம் அணுகியதில் மந்திரியார் அந்த 12 மாணவர்கள் மீதுள்ள வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ளும்படி போலீசுக்குக் கட்டளையிட போலீசார் வாபஸ் வாங்கிக் கொண்டார்கள்.

அதுபோலவே கழக உணர்ச்சி உள்ள மாணவர்கள் 5 பேர்கள் கல்வி மந்திரியாரைக் கேட்டதில் மந்திரியார் வாபஸ் வாங்க மறுத்துவிட்டதோடு மாணவர் கழகத் தலைவர் தோழர் மதியழகன் பரீட்சைக்கு உட்காரக் கூடாது என்றும் தடைவிதித்து தடுத்தும் விட்டார், அதன் பிறகு மேற்கண்ட வழக்கை சிதம்பரம், பரங்கிப்பேட்டை ஆகிய ஊர் மாஜிஸ்ட்ரேட் கச்சேரிகளில் ஒரு ஆண்டாக நடக்கும்படி ஏற்பட்டு சுமார் 30 வாய்தாக்களுக்குமேல் ஒத்திப்போட்டு இழுக்கடித்து, வழக்குக்கு ஆகரூ.2000-க்கு மேல் செலவும் ஏற்பட்டு கடைசியாக திராவிட கழகத் தலைவருக்கு 6 மாதம் கடின காவல் தண்டனையும் மாணவர்களுக்கு மொத்தம் ரூ. 500 வரை அபராதமும் விதிக்கப்பட்டு இருக்கிறது.

இந்த வழக்கு சம்பந்தமான தீர்ப்பு நியாயமான தீர்ப்பு அல்ல என்று மாணவர்களும் வக்கீல்களும் கருதுவதாலும் அத்தீர்ப்பு மாணவர்களின் பின் வாழ்வைப் பாதிப்பதாலும் தீர்ப்பின் மீது அப்பீல் செய்யவேண்டி இருக்கிறது.

மாணவர்கள் இவ்வழக்குக்கு ஆக சொந்தக் கைப்பொறுப்பில் இதுவரை 2000 ரூபாய்க்கு மேல் செலவு செய்து இருக்கிறார்கள். ஆனதால் தற்காலம் அவர்களது நிலைமை அப்பீல் வகையில் செலவுக்குக் கண்டிப்பாய்ப் பொதுமக்கள் ஆதரவு தேடவேண்டியதாக இருந்துவருகிறது. எனவே அப்பீலுக்குப் பொதுஜனங்கள் அருள் கூர்ந்து பொருளுதவி செய்ய வேண்டியது மிகுதியும் தேவையான காரியம் என்று கருதுவதால் பொதுமக்கள் தங்களாலான உதவி செய்ய வேண்டுமாய் வேண்டிக் கொள்கிறேன்.

ஈ. வெ. இராமசாமி

**நன்கொடை:**

ஈ. வெ. இராமசாமி 100—0—0

## மத ஏகாதிபத்யத்தின்மீது

4-ம் பக்கத் தொடர்ச்சி

களை இவர்கள் செய்து வருவதாலும் இவர்கள் தண்டிக்கப்படப் போகிறார்கள், ஒழுங்காக நடப்பவர்களுக்குப் பயம் இல்லை."

(டி. எஸ். பட்டாபிராமன் M. L. A.)

"ஒருசிலகணிப்பட்ட கூட்டத்தின் சுகபோக வாழ்வுக்குப் பாதகம் ஏற்படுகிறது என்பதற்காக இம்மசோதாவை எதிர்க்கிறார்கள். மதத்தின் பேரால் மக்களைப் பகுத்தறிவிற்குப் புறம்பான காரியங்களைச் செய்யத் தூண்டப்படுகிறதே தவிர மனிதன் மனிதனாகப் பாவிக்கப்படவில்லை. மனிதனிலே பல உயர்வு தாழ்வு கற்பிக்கப்படுகிறது. இவையெல்லாம் போக்கடிக்கப்படவேண்டும்.

உலக உத்தமராகிய காந்தியாரையே சுட்டுக் கொன்ற பார்ப்பன கோட்சே இனமா மக்களுக்கு நன்மை செய்யப்போகிறது? ஒருக்காலும் செய்யாது"

(வேலுசாமி M. L. A.)

"கல்வியற்ற மக்கள் பலர் கையெழுத்திடத் தெரியாமல் கஷ்டப்படும்பொழுது அவர்கள் துயரைப்போக்கக்கல்வி அறிவைப் பெருக்க முயலாது தங்கத்தில் கதவு போடவேண்டுமெனறால் தன்மான முடையவன் சும்மா இருக்கமுடியுமா?

மதத்தின் பேராலும் சாதியின் பேராலும் சுரண்டி வாழ்ந்ததும் சச்சரவுகளைக் கிளப்பி வாழ்ந்ததும் போதும். இனித்தேவை இல்லை."

பாலகிருட்டினன், M. L. A.

"ஆதியில் மனிதன் மிருகத்தனமாக ஒழுக்கந்தவறி இருந்த காலத்தில் ஓரளவுக்கு நாகரிகமும் ஒழுக்கமும் கற்பிக்கப்பட்டு அதை வளர்க்க வேண்டும் என்பதற்கு உதவி புரியவே மதமும் மடங்களும் உண்டாக்கப்பட்டன. இம்மடங்கள்மூலம் மக்களுக்கு அறிவும் கல்வியும் போதிக்க வேண்டுமென்பதற்காகவே பலலட்ச ரூபாய்களும் பல ஆயிரம் ஏகர் நிலங்களும் நன்கொடையாக வழங்கப்பட்டன. உதாரணமாக நாடார் வகுப்பினராகிய எங்கள் பணமே பத்துலட்ச ரூபாய்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இன்று மடங்கள் மடமையை வளர்க்க, மங்கையர்களைக் கற்பழிக்க, கொலை பாதகம் புரிய உபயோகப்படுத்தப் படுகிறது. இக்குற்றங்களை மறைப்பதற்காக பூரிரண்டு கலலூரி ஏற்படுத்தப்பட்டன. அதுவும் இப்பொழுதிருக்கும் இடம்தெரியாமல் போய்விட்டன.

இது, வக்காலத்து வாங்கும் வக்கீல வைத்தினாத அய்யருக்கு ஏன் தெரியவில்லை.

நாங்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்வதும், இச்சட்டம் கொண்டு வருவதும் கட்சிககட்டுப்பாட்டிற்கே விரோதம் எனக்கூறும் வைத்தினாத அய்யர், ஜமீன் இனும் ஒழிப்பு மசோதாவின்பேரில கூக்குரலிட்டுஅலறித் அடித்து அவதூறு பேசியது கட்சிக கட்டுப்பாட்டுக்கு விரோதமானதல்லவா?

எக்கட்சிக்காரர் கறைச்சொன்னலும், அதில் உள்ள உருப்படியான கருத்தை நிறைவேற்ற வேண்டியதே அரசியலார் கடமை. வக்கீல்களுக்கு ஒருதலைப்பட்சமே பேசத்தெரியுமே தவிர, இருகட்சியின் நியாயத்தையும் புகுந்து பார்க்கத் தெரியாது.

பத்திரிகைகளும் வைத்தியநாதய்யர் கும்பல்களுக்கே ஆதரவு கொடுக்கிறதே தவிர, மற்ற உண்மைக் கருத்துக்களைக் கூறுபவர்களுக்கு ஆதரவு தருவதில்லை

ஆகவே இனி நாங்களும் பார்ப்பனர் கொண்டுவரும் சட்டத்தை உடைத்துத் தகர்க்கவே தீர்மானித்துள்ளோம்

நமது பிரதமர் ரமண மகரிஷியின் வழிநடப்பவரென்றும், கிருத்திகை விரதம் பூண்டு வருபவரென்றும், அவருக்கு மதத்தில் எவ்வளவு பற்று இருக்கிறதென்றும் தெரிந்திருந்தும் அப்படிப்பட்டவர் கொண்டு வரும் மசோதாவை எப்படி ஆட்சேபிப்பது? மடாதிபதிகள் செய்து வரும் லீலைகள் எம்மட்டும் சென்றிருக்கின்றன என்பதும் நமக்குத் தெரியும். மதத்தைக் காப்பாற்றுவதாகச் சொல்லிக் கொள்ளும் இந்த மதஸ்தாபனத்தார் என்ன செய்திருக்கிறார்களென்று பார்த்தால் ஒன்றுமில்லை. பலர் பிறமதத்திற்குச் செல்வதைத்தான் நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

மடாதிபதிகளின் அட்டூழியங்களால் நாடே கொந்தளிப்படைந்திருக்கும் இந்நாளில், சமூதனி என்ற பெயரால் சிலர் அதை ஆதரிக்க வருவது சிறிதும் பொருத்தமாகாது. ஒவ்வொரு சட்டத்திற்கும் சிறிது எதிர்ப்பு இருக்கத் தான் செய்யும். அதற்காக இம்மாதிரியான நல்லசட்டத்திற்கு எதிர்ப்பாக ஒருவர் உண்ணாவிரதம் இருக்கிறாரென்று நாம் எப்படிக் கொள்கையை விட்டுக் கொடுக்க முடியும்? எனவே இனியும் தாமதியாமல் இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டும்."

(கே. டி. கோசல்ராம் M. L. A.)

"மடாதிபதிகளின் லீலைகளை "சந்திரகாந்தா" என்னும் சினிமாப் படத்தில் பார்த்த மக்கள் கொதிப்படைந்து மடாதிபதிகளை யொழித்து விட வேண்டுமென்று கூறிக்கொண்டிருக்கின்றனர். இந்த மசோதா ஒரு புரட்சிகரமானது. இது சம்பந்தமான பொதுஜனஅபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் ஒன்று செய்யலாம். நான் இந்த மசோதாவை ஆதரிக்கிறேன். ஸ்ரீ எஸ். எஸ். வரதாச்சாரி ஆட்சேபிக்கிறார். இருவரும் சட்ட சபை அங்கத்தினர் பதவியை ராஜினாமா செய்துவிடுவது. இந்த மசோதாவை ஆதாரமாகக் கொண்டு இருவரும் போட்டியிடுவது. அதிலும் திருவல்லிக்கேணி தொகுதியிலேயே போட்டியிடலாம். யார் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள் என்று பார்த்து விடலாம்.

மடாதிபதிகளின் அட்டூழியங்கள் பல. பிரதமர் இராமசாமி காலத்தில் கொண்டு வரப்படும் இந்த மசோதாவை எதிர்த்துப் பேசிய வைத்யநாதய்யர் முன்னூள் ராஜாஜி பிரதமராக இருந்த காலத்தில் கொண்டுவரப்பட்டிருந்தால் என்ன செய்திருப்பார்?"

—எம். கன்னியப்பன் M. L. A.

"பொதுமக்களுக்கு எந்த விதத்திலும் உபயோகமில்லாத இந்த மடாதிபதிகளை இப்படியே விட்டுக் கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை."

—பி. கந்தசாமி M. L. A.

"இன்றைய தினத்தில் மடங்கள் என்ன ஸ்திதியில் இருக்கின்றன என்று பார்த்து அவற்றைத் திருத்த முன் வருவதற்கு நமக்கு உரிமையுண்டு. வருமானத்தில் பெரும்தொகையை போக்கக்களுக்காகச் செலவு செய்துவிட்டு ஒரு சிறு தொகையை ஆங்காங்கு தேவாரப்

பள்ளிக்கூடங்களை அமைக்கச்செலவு செய்து மக்களை ஏய்ப்பதைத் தவிர வேறு என்ன நடக்கிறது? மடங்களில் பட்டத்திற்காகவும் பணத்திற்காகவும் எத்தனை கொலைகள் நடந்திருக்கின்றனவென்பது யார் அறியாதது. அப்படியிருக்க இந்த மசோதா கொண்டு வருவது தவறானதென்று எப்படிச் சொல்ல முடியும்-தவறான வழியில் போகிறவர்களைத் தண்டித்துத்திருத்த வேண்டிய பொறுப்பு சர்க்காருக்கு இல்லையா? மடாதிபதிகளில் நல்லவர்களும் சிலர் இருப்பதால் எல்லா மடங்களையும் இந்த மசோதாவில் சேர்ப்பது சரியல்லவென்று கூறப்படுகிறது. ஒரு மடத்தில் இன்று இருப்பவர் நல்லவராக இருக்கலாம். நேற்று இருந்தவர் நல்லவராக இருந்திருக்கலாம். நாளை வருவர் நல்லவராக வரலாம். எல்லாவற்றையும் கவனித்துப் பார்த்தால் இந்தச் சீர்திருத்தம் மிகவும் அவசியமென்று தான் ஏற்படும். இம்மாதிரி மதசம்பந்தமான, கடவுள் சம்பந்தமான விஷயங்களில் தலையிடுபவர்கள் கெட்டுப்போவார்களென்று நண்பர் ஒருவர் சொன்னார். மதத்தின் பேராலும் கடவுள் பேராலும் நடக்கும் அட்டூழியங்களை மூடிவைத்து அவைகளுக்கு ஆதரவாகப் பேசுகிறவர்கள் கெட்டுப்போகமாட்டார்களாவென்று அவரைக்கேட்க விரும்புகிறேன்.

'விடுதலை,' 'புரட்சி,' 'கிளர்ச்சி'' போன்ற சில பத்திரிகைகள் தான் இந்த மசோதாவை ஆதரிக்கின்றனவென்று சில அங்கத்தினர்கள் பேசினார்கள். அதற்கென்ன செய்யலாம்? மசோதாவை ஆதரிக்க மனமில்லாதவர்களிடத்தில் மற்றப் பத்திரிகைகள் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏன் "தினசரி" பத்திரிகை இதை ஆதரிக்கவில்லையா? அது ஒரு உயர்தர பத்திரிகையல்லவா?

இன்னுமொரு விஷயம் கூற விரும்புகிறேன். நான் சிறையிலிருக்கும்பொழுது சிறையில் ஒரு முஸ்லிமோ அல்லது ஒரு கிறிஸ்தவரோ இறந்துவிட்டால் அவர்களுடைய மதஸ்தாபனங்களிலிருந்து ஆட்கள்வந்து அந்தப்பிரேத அடக்கத்துக்குவேண்டிய ஏற்பாடு செய்வார்கள். ஹிந்து ஒருவன் இறந்தால் அவன் அனாதை தான், அப்படிப்பட்ட வகையில் இந்த மடங்களும், மடாதிபதிகளும் என்ன நன்மைகளைச் செய்திருக்கிறார்களென்று கேட்கிறேன். இந்த நிலைமையை நேரில்காண்பவர்களுக்கு மதம் மாற எண்ணம் ஏற்படுமானால் அவர்களைக் குறைகூறமுடியுமா?

மதசம்பந்தமான விஷயங்களில் தலையிட்டால் இனிச் சட்டசபையில் காங்கிரசுக்கு இடங்கிடையாதென்றும், காங்கிரஸ் அழிந்துவிடுமென்றும் கூறப்பட்டது. காங்கிரஸ்நன்கு வேரூன்றிவிட்டது, இனி அதற்கு அழிவென்பதே கிடையாது. இம்மாதிரி எல்லாம் சொல்லிக் கொண்டு இனிக் காலங்கடத்த முடியாது.

சர்க்கார் இலாக்காக்களில் லஞ்ச ஊழல்கள் இருக்கின்றனவென்றும், எனவே இந்த மசோதாவின் மூலம் திறம்பட நிர்வாகம் நடத்த முடியாதென்றும் சில அங்கத்தினர்கள் பேசினார்கள். மதம், தர்மஸ்தாபனங்களில் மட்டும் இப்பொழுது என்ன வாழுகிறது. எடுத்ததற்கெல்லாம் கைக்கூலி கொடுத்து ஆட்கள் கொண்டு வரப்படுகின்றனர் எல்லாவற்றிற்கும் மேலாக, சிதம்பரம் ஆலயத்தில் ஒரு ரூபாய் தீக்ஷதருக்குக் கொடுத்தால்தான் சிதம்பர இரகசியத்தைக் காணமுடியும் அந்த வெட்டவெளியைக் காண்பிக்க ரூபாய் வாங்குவது லஞ்சமில்லையா? யாரோ ஒரு சம்பளக்காரன் 4 அணா வாங்கிவிட்டால் அது லஞ்சமாகிவிடுகிறது, கோவிலில் தீக்ஷதர் ரூபாய் வாங்குவது தெய்வப் பிரீதியாய்ப் போய் விடுகிறது. இந்த விஷயங்களை எல்லாம் மனச்சாட்சியுடன் நன்கு கவனிப்போமானால், மததர்மஸ்தாபனங்களைச் சீர்திருத்தவேண்டியது எவ்வளவு அவசியமென்றும், ஆகவேஇந்த மசோதா எத்தனை முக்கியத்துவம் வாய்ந்ததென்றும் தெரியவரும். எனவே எல்லா அங்கத்தினர்களும் இதுவரை அதை ஆட்சேபித்தவர்கள் உட்பட இந்த மசோதாவை ஆதரித்துச் சமூகத்திற்கு நன்மை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(தேவநாகய்யா, M L A.,)

"காங்கிரஸ் அங்கத்தினர்கள் பொதுஜன அபிப்பிராயத்துக்கு மாறாக எந்த விஷயத்தையும் செய்ய மாட்டார்களென்ற நம்பிக்கை எல்லாருக்கும் உண்டு. அதை ஒரு காரணமாகக்கொண்டு மசோதாவை ஒத்திப்போட நினைப்பது சரியல்ல. மற்ற மதங்களில் இத்தனை ஊழல்கள் இல்லை எனவே இந்துமதத்திற்கு இந்தச் சீர்திருத்தம் மிகவும் அவசியம்.

இந்த மசோதாவை ஆட்சேபித்து கோட்டை முன் ஒருசுவாமி உண்ணாவிரதமிருக்கிறார். தண்ணீர் கூடச் சாப்பிடாமல் 13 நாட்களுக்கு மேல் அவர் உயிருடன் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதன் உண்மை ஆண்டவனுக்குத்தான் தெரியும், அது உண்மையாக இருக்குமானால் அங்கத்தினர் எல்லோருடைய மனதையும் ஒரே நாளில் மாற்றக் கூடிய சக்தி அவருக்கு இருக்க வேண்டும். இனிக் கொள்ளையிட்ட ஒருவரைக் கைது செய்யக்கூடாதென்று ஒருவர் உண்ணாவிரதம் இருப்பார். இப்படி உண்ணாவிரதம் இருப்பவர்களுக்குப் பயந்தால் எவ்வித நன்மையும் செய்ய முடியாது. எனவே இந்த மசோதாவை உடனே நிறைவேற்றவேண்டியது அவசியம்."

-தோழியர் லட்சுமிபாரதி M L A.

"மடாதிபதிகள் செய்யும் அட்டூழியங்கள் சகிக்க முடியாதவை. காவி வேஷ்டியைக் கட்டிக்கொண்டு சுவாமிஎன்றுசொல்லிப் பொது மக்களை ஏமாற்றுகின்றனர்.

இம்மாதிரியான சாமிகளுக்காகப் பரிந்துபேசுவது எவ்வளவு பாதகமான செய்கை என்பதை அங்கத்தினர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். கடவுள் பெயரால் இவர்கள் செய்வதெல்லாம் பெரும்மோசமான செயல்களாகும். எனக்கு மட்டும் அதிகாரமிருந்தால் ஆலயங்கள்மடங்கள் இல்லாமலே செய்துவிடுவேன்.

கடவுளை நான் ஏன் அவமதிக்கிறேன், நானே கடவுள், ஒவ்வொருவரும் கடவுள்தான், உண்மையே கடவுள், சத்தியமே கடவுள், இந்த உண்மையை மறந்து போலிச் சாமியார்கள் அறியாது............

நாட்டில் மதத்தின் பேராலும் கடவுள் பேராலும் நடக்கும் ஊழல்களை எடுத்துச்சொல்வதற்கு அஞ்ச வேண்டிய அவசியமில்லை. அப்படிப்பட்ட ஊழல்களை ஒழிக்கக் கொண்டு வரப்பட்டிருக்கும்இந்தமசோதா ஒரு நல்ல சமூக சீர்திருத்த ஆயுதமாக விளங்குகிறது.

கோட்டைக்கு எதிரே ஒருசாமியார் உண்ணாவிரதமிருக்கிறார், இந்த மசோதாவை எதிர்த்து அவர் விரத

(12-ம் பக்கம் பார்க்க)

# ★ முட்டுக்கட்டை போடாதே ★

[சாமி]

வாழ்த்துகிறோம், அறநிலையங்களில் மலிந்துகிடக்கும் மாசு துடைக்க நெஞ்சுத்துணிவுடன் முன் வந்த சென்னைமாநில அரசினரை! பல்லாண்டு கூறுகிறோம், சுயநலச் சூறாவளியில் சிக்கிச்சிதறடிக்கப்படாதிருக்கும் பொருட்டு!! அத்தி பூத்தாற்போல் நம் ஆட்சியாளர் செய்யும் அருஞ் செயல்களைக் கத்திக்கொண்டு களையப்பார்க்கும் சுரண்டல் குழுவின் கொள்கைக்குவளைந்து கொடுத்துவிடாதபடி!!

அறநிலையங்கள் தோன்றக் காரணம் என்ன? ஆட்சிப்பளுவைத்தாங்கியிருந்த தமிழ் மன்னரும், பொருள் மிகுந்திருந்த பெருஞ்செல்வரும் சன்மார்க்கத்தில் மக்களைக் கொண்டு செலுத்த ஓய்விலலாமையால் அவ்வறத்தொழிலை முற்றத்துறந்த முனிவரிடம் ஈந்து, பொன்னும் மண்ணும் கொடுத்துதவினர் நன்மார்க்கம் செழிக்க, தமிழ்தழைக்க, கலை வளர்க்க.

ஆனால், இன்று நாம் காண்பதென்ன? வெறும் கபடநாடகம்—கள்ளக்கூத்து — பெருமக்களின் உயர்ந்த குறிக்கோள் சிதறடிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். தந்நலம் என்னும் அடிப்படையில்சோம்பேறிச்சுவர்கள் எழுந்தன. தாங்குவதற்குத் தம்பிரான்கள், தூண்கள்-உலுத்தர் உண்டு உறங்கும் மண்டபம் கட்டப்பட்டது. சன்மார்க்கம் நெருங்கவும் நடுங்கும் துன்மார்க்க சாலை. அமிழ்தினுமினிய தமிழ் என்றால் உமிழ் என்றுரைக்கும் "உயர் ஞானிகளுக்கு" உறைவிடம். கலைக்குக்கொலைக்களம். தான் தோன்றித்தனம் தலைவிரிகோலமாகத் திருத்தாண்டவம் புரியும் நாடக அரங்கு.

நெல்விளைய வித்திட்ட நிலத்தில் களை முளைத்திருப்பதைக்கண்டு கண் கலங்கி, உழவன் அதைக்களைய முன்வந்துள்ளான். காவற்காரன் கடமையைச் செய்யத் தவறியதோடு, களை முளைப்பதற்கும் காரணமானான். ஆகவே அவனை அகற்றிவிட்டுக்காவல் தொழிலை உழவனே மேற்கொள்ள முனைந்து நிற்கின்றான். சன்மார்க்க வேலி அமைத்து, அன்பு நீர்பாய்ச்சி அறப்பயிர் விளைவிக்க ஆர்வங்கொண்டுள்ளான்.

இதைக்கண்டு, அகமகிழ்ந்த ஆதரவளிப்பதைவிடுத்து அலறி ஓலமிடுகிறது ஒரு சிறுகும்பல். உரிமை பறிபோகிறதாம். இந்த மதத்திற்கு அழிவு தேடும் சட்டமாம். இனாம் ஒழிப்புமுறையிலும், அறநிலையப்பாதுகாப்புப் பிரச்சினையிலும் கட்சி ஒருமை மனப்பான்மையையும் காற்றில் தூற்றிவிட்டு, மனச்சாட்சியின் வேதனை தாங்காது வெடித்துப் பூச்சாண்டிகாட்டிவருகிறது. ஜமீனுக்கு ஒரு நீதி செல்லும்; இனாமுக்கு அதுவே செல்லாதென்று சொல்லும் இரட்டைநாக்கு. ஒருகுலத்துக்கொரு நீதி—தம்பிரான்களுக்குத் தரகு — தமிழன் தாழ்ந்து தரைமட்டமாக்கப்படவேண்டும்! ஆரியரின் அடிவருடும் இருடிகள் அரியாசனத் திருக்க வேண்டும்! சிங்கக்குகையில நரியின் விளையாட்டு. தந்திரமும் மந்திரமும் அதிககாலம் ஆட்சி செய்ய முடியாது. விரைந்தோடும் காலம் விரைவில் வருகிறது.

செல்வம் கொழித்த செந்தமிழ் நாடுதான். மூதேவி வந்தவுடன் சீதேவி சென்று ஒரு இடத்தில் முடங்கிவிட்டாள் செயலற்று. இன்று வறுமையால் வாடுகிறது நாடு. வற்றிய நெற்றியுடனும் ஒட்டிய வயிறுடனும் காட்சிதரும் எலும்புக்கூடுகள் உலவுகின்றன எங்கும். பாசம் பிடித்துப் பயனற்றுக்கிடக்கும் பணத்தை எடுத்து, உணவு விடுதிகளை அமைத்து, இவர்களுக்கு உரிய வேலை கொடுத்து உணவளித்தால் கடவுள் வெகுண்டு வேறெங்கும் சென்று விடுவாரோ? தொழுநோயால் வருந்தும் தொண்டர்கள் கூட்டம் நகரங்கள் எங்கும் கண்கொள்ளாக் காட்சி. பிறர்க்குதவாது கசையும்பொருளை எடுத்து மருத்துவ நிலையங்கள் ஏற்படுத்தி இவர்களுக்குச் சேவை செய்தால் "நம்மைக் கவனியாமல் எங்கே சென்றுபடா பக்தா" என்று ஏசுவாரா இறைவன்? சன்மார்க்கத்தை வளர்க்கும் நன்னூல்களை விலை கொடுத்து வாங்க இயலாத மக்களுக்கு இலவசமாக அச்சிட்டு வழங்கினால் சந்தடியில்லாத இடத்தில் சிந்தையில் சிவனார் தோன்றிச் சிக்கனமாயிருவென்று ஞானப்பால் ஊட்டுவாரோ? இப்படியெல்லாம் செய்வாராயின் அப்படிப்பட்ட கடவுள் எமக்கு வேண்டாம். சீட்டுக் கொடுத்துவிடுவோம் சீக்கிரத்தில். மானிடக் குலத்தின் மாபெரும் தந்தை, விருப்புவெறுப்பற்ற, உருவமற்ற ஆதி முதற்பகவன்தான் எங்கள் தெய்வம். இடைச் செருகல்களையும், புரட்டு உருட்டுக்களையும் ஏற்கமாட்டோம். விரட்டியடிப்போம்.

"இரந்து முயிர் வாழ்தல்
வேண்டிற் பரந்து கெடுக
இவ்வுலகியற்றியான்"

என்று பறைபறைந்த வள்ளுவர், நாட்டின் தற்போதைய வறிய நிலைமைக் கண்டு அறநிலையப் பாதுகாப்பை அரசினர்க்களிப்பதை உரிமை பறிபோகும் காரியம் என்றுரைப்பாரா? "தனி யொருவனுக் குணவில்லை யெனில், ஜகத்தினை யழித்திடுவோம்" என்று குமுறியுரைத்த பாரதியார், இப்பரிதாப நிலைமைக் கண்டு, இருட்டில் குவிந்து எதுவும் செய்யச் சக்தியற்றிருக்கும் பணம் வறியோரின் துயர் களைய, பிற கலைச் செல்வங்களைக் கொண்டேர, எட்டுத் திக்கும் சென்று தமிழ் மணம் கமழச் செய்யப் பயன்படக் கூடாதென்று கூறுவாரா? வாருங்கள் அறமன்றம் ஒன்று அமைப்போம். வள்ளுவரும் பாரதியும் எங்கள் சார்பில் வாதாடுவார்கள். உங்கள் குலவிளக்குகளை நீங்காத நித்திரையினின்றும் நீக்கி உங்கள் வறட்டு வேதாந்தத்தை எல்லோருக்கும் எடுத்துச் சொல்லக் கொண்டு வாருங்கள். நாட்டுப் பணியில் உயிர் நீத்த வீர வழக்கறிஞர் நெம்பாளூர் தீர்ப்பளிப்பார்.

வருமுன் காப்பவர்களாயிருந்தால் தம்பிரான்கள், சென்றதை மறந்து இவ்வறச் செயல்களை மேற்கொள்ள முன் வரட்டும். அப்பொழுது தான் "எங்கள் தம்பிரான்" என்று தமிழர் உங்களைக் கண்டு உவந்து கூறும் நன்னாள்வரும். நல்ல தப்பியதென்று நீங்களும் நிமிர்ந்து நடமாடலாம். பிழைக்கும் வழி பிறிதில்லை. கவலைபற்றிருப்பீர்களானால் "சிவ பிரான் போகப்பிரவேசம் செய்ய எழுந்தருளவில்லையோ" என்ற புகழ் உங்களை விட்டு ஒருக்காலும் நீங்காது. நீ முன்னர் வைத்த வைக்கோல் நிலைமைதான் உங்கள் கதியுமாகிவிடும்.

நீங்கள் செய்யத் தவறினால்,

(அடுத்த பக்கம் பார்க்க)

# காலவேகம்!

—⊛—

ரோம் நகரம் தீப்பற்றிக்கொண்டு எரிந்தபோது, நீரோ மன்னன் வீணை வாசித்துக் கொண்டிருந்தான். நீரோ மன்னனின் கொடுங்கோன்மையை விளக்க, மனிதத் தன்மையற்ற தன்மையில்லையை விளக்கக் கூறுவர் இதனை.

நீரோமன்னன் மனம், இரும்போ, கல்லோ, தலைநகரம் தீ பிடித்துக் கொண்டபோது, மக்கள் மடிவரே என்பது பற்றிய கவலையுமற்று, நிம்மதியாக வீணை வாசித்துக் கொண்டிருந்தானே என்று கூறுவர்—கண்டிப்பர்.

• • •

மிதிலா நகரம் தீப்பிடித்துக் கொண்டு எரிந்தது ஒரு சமயம். ஜனக மகாராஜா, அதுபோது, அரண்மனையில், வேதாந்தம் படித்துக் கொண்டிருந்தார்.

ஜனக மகாராஜாவின், மனோதிடத்தை, உலகப் பற்றை ஒழித்த தன்மையை, ஞானத்தை, விளக்கக் கூறுவர், இந்தக் கதையை.

ஊரே தீப்பிடித்துக் கொண்டது—உயிருக்கும் உடைமைக்கும் பெருஞ் சேதம். எனினும் அந்த ராஜரிஷி, மனம் குழம்பாமல், உலகை மறந்து, வேதாந்த விசாரணையில் ஈடுபட்டிருந்தார். அவருடைய உள்ளம் அவ்வளவு உரமானது! அவருடைய ஞானம் அவ்வளவு உறுதியானது. நாற்புறமும் நெருப்புச் சூழ்ந்துகொண்டிருந்தபோதும் அவர் துளியும் கலங்காமல், இந்த மாயாப் பிரபஞ்சத்தைப் பற்றிய கவலையற்று, நித்தியமானதும், நிர்மலனை அறிய உதவுவதும், இம்மைக்கு ஏற்றதுமான, வேதாந்த விசாரணையில் ஈடுபட்டிருந்தார்!—என்று, ஜனகரின் செயலை, வியந்தும் புகழ்ந்தும் கூறுவர், இங்கு

• * *

நீரோ, கொடுங்கோலன்!
ஜனகன், ராஜரிஷி!

ரோம் பெருநெருப்பில் சிக்கியபோது நீரோ வீணை வாசித்து, மக்களின் கண்டனத்தையும், சரித்திரத்தில் இழிவிடத்தையும் பெற்றான்.

மிதிலை தீ பிடித் தெரிந்தபோது ஜனகன், வேதாந்தம் படித்து, நம் நாட்டுப் பக்தகோடிகளால் பாராட்டுதலையும், புண்ய ஏட்டிலே புகழிடத்தையும் பெற்றான்.

சம்பவம், ஒரே விதமானதுதான்—ஆனால், சரித்திரம், நீரோவைக் கொடுங்கோலர் பட்டியிலே சேர்க்கிறது—புராணம், ஜனகரை, ரிஷிகள் பட்டியிலே சேர்க்கிறது. இத்தகைய விசித்திரங்கள் பலப் பல, நமது நாட்டு மக்கள் மனதிலே, புராண மூலம், ஏற்றிவைக்கப்பட்டுள்ளன. நாம், நீரோ மன்னனை நல்லவன் என்று கூறவோ, அவனது வீணை வாசிப்பு வியக்கத்தக்க செயல் என்று பாராட்டவோ, முனைவரவில்லை—சரிதம் அவனுக்குத் தந்துள்ள இடம், அவன் செயலுக்கும் குணத்துக்கும் ஏற்றதுதான். ஆனால், ஜனகருக்கு ஏன், நமது புண்ய ஏடு, புகழிடம் தரவேண்டும்—அவரை ஏன் மகரிஷியாக்க வேண்டும்—நகரம் நெருப்பில சிக்கியபோது கவலைப்படாமலிருந்த சம்பவத்தை, அவருடைய புகழ் பரப்பும் சம்பவமாக்குவது எந்த வகையான நியாயம் என்றுதான் யோசிக்கிறோம்.

சரிதம் தரும் தீர்ப்புக்கும் புண்ணிய ஏடு தரும் தீர்ப்புக்கும், ஏன் இவ்வளவு பெரிய, நேர்மாறு இருக்கிறது என்று கேட்கிறோம்.

(5-ம் பக்கம் பார்க்க)

10-ம் பக்கத் தொடர்ச்சி

யிருக்கிறார். அவர் விரதமிருப்பது அல்லோலகல்லோலப்படுகிறது. அவருக்குச் சற்றுத் தூரத்தில் மற்றுமொருவர் பல ஆயிரரூபாய் தமக்கு வரவேண்டியது கிடைக்கவில்லை என்று உண்ணாவிரதமிருக்கிறார். அவரை என்னவென்று கேட்பாரைக் காணோம்.”

— காமேஸ்வரராவ் M. L. A.

இவ்விதமாக, கோயில்களையும், மடங்களையும், அவற்றின் பரிபாலகர்களையும், அங்கு நடக்கும் ஊழல்களையும் சர்க்கார் முன்னிலையில்—சர்க்காரை நடத்துபவர்களை விளக்கிப் பேசவும், அவை ஒழிக்கப்படவேண்டும்—சட்டமியற்ற வேண்டும் என்று உறுதிகொள்ளவும், மத ஊழல்களை விளக்கிய நம்மீது கணை பூட்டிய காங்கிரஸ் நண்பர்களே முன் வந்தது கண்டு அவர்களைப் பாராட்டுகிறோம்.

[முன்பக்கத் தொடர்ச்சி]

அதை மக்களே செய்ய முற்படுவார்கள். சட்டம் இப்பொழுது ஆமை வேகத்தில் ஊர்ந்து வந்தாலும் இத்திட்டம் மக்களால் முயல் வேகத்தில் நடைமுறையாக்கப்படும் வருங்காலத்தில். காலம் வழி விடும். கருத்து ஒற்றுமை துணை செய்யும்.

மக்களின் மனக்கொதிப்பிற்கு முன்னால் ஒரு சிறு கும்பலின் இனக்கதறல் என்ன செய்யும்? புரட்சிக் கனலில் அகப்பட்ட துரும்பு, புகைந்து சாம்பலாவது திண்ணம். அசைக்க முடியாத கற்பாறை என்று கருதி வாளாவிருந்தால் உளி கொண்டு உடைத்தெறியத் தயாராகிறான் புத்துலகச் சிற்பி. சேர்ந்து செயலாற்றத் திறனற்றோரே! முட்டுக்கட்டை போடாதீர் முற்போக்குச் சக்திக்கு!


## தலைவர்களின் படங்கள்

பெரியார், அண்ணாத்துரை, கவிஞர் பாரதிதாசன் உருவமைந்த கண்கவரும் அழகிய படங்கள் (1949-வருடக் காலண்டரில் வெளிவந்த படங்கள்) தனித்தனியே வெளிவந்துள்ளன.

ஒன்றின் விலை 0—5—0

வியாபாரிகட்கு தக்க கழிவு தரப்படும்

திராவிடன் பதிப்பகம் P. B 18. வேலூர் N. A.


Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street, Kancheepuram.